# மகனே மனோஜ்! மறைந்து விட்டாயா?



பாரதிராஜாவின்
பாதி உயிரே!
பாதிப் பருவத்தில்
பறந்து விட்டாயா?

'சிங்கம் பெத்த பிள்ளையின்னு
தெரியவப்போம் வாடா வாடா'
என்று உனக்கு
அறிமுகப் பாடல் எழுதினேனே

சிங்கம் இருக்கப்
பிள்ளைநீ போய்விட்டாயா?

உன் தந்தையை
எப்படித் தேற்றுவேன்?

"எனக்குக் கடன் செய்யக்
கடமைப்பட்டவனே!
உனக்கு நான் கடன்செய்வது
காலத்தின் கொடுமைடா" என்று
தகப்பனைத் தவிக்கவிட்டுத்
தங்கமே இறந்துவிட்டாயா?

உன் கலைக் கனவுகள்
கலைந்து விட்டனவா?

முதுமை மரணம் இரண்டும்
காலத்தின் கட்டாயம்தான்.
ஆனால், முதுமை
வயதுபார்த்து வருகிறது;
மரணம் வயதுபார்த்து
வருவதில்லை

சாவுக்குக் கண்ணில்லை

எங்கள் உறக்கத்தைக்
கெடுத்துவிட்டவனே!
உன் உயிரேனும்
அமைதியில் உறங்கட்டும்



-கவிப்பேரரசு
வைரமுத்து



சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று (26.03.2025) கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி தலைமையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் 2025–2026 ஆம் ஆண்டிற்கான வரைவு கொள்கை விளக்க குறிப்பு, அறிவிப்புகள் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர் திருமதி வே. அமுதவல்லி, கைத்தறி துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், துணிநூல் துறை இயக்குநர் திருமதி இரா. லலிதா, கோஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் தீபக் ஜேக்கப், மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை - ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில்

## ‘WTT ஸ்டார் கன்டென்டர் 2025’ டேபிள் டென்னிஸ் வெற்றிக் கோப்பை!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிமுகப்படுத்தி - பயிற்சி ஆட்டத்தை பார்வையிட்டார்!

சென்னை, மார்ச் 27-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.3.2025) சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் ‘WTT ஸ்டார் கன்டென்டர் 2025’ டேபிள் டென்னிஸ் போட்டியின் வெற்றிக் கோப்பையை அறிமுகப்படுத்தி, பயிற்சி ஆட்டத்தை பார்வையிட்டார்.

முதலமைச்சர் அவர்கள் 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி, சென்னை பார்முலா 4 கார் பந்தயம், சென்னை ஓபன் (WTA) சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2022 போட்டி, சர்வதேச ஸ்குவாஷ் போட்டி 2023, “ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி சென்னை - 2023”, சர்வதேச அளவிலான உலக அலைச்சறுக்கு (சர்ஃபிங் லீக்) போட்டிகள், தமிழ்நாடு அரசு மற்றும் ஹெச்.சி.எல் (HCL) நிறுவனம் இணைந்து மாபெரும் சைக்ளோத்தான் போட்டி, சென்னை செஸ் கிராண்ட் மாஸ்டர் 2023, கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி, ஏ.டி.பி. சேலஞ்சர் சர்வதேச ஆண்கள் டென்னிஸ் போட்டி, முதலமைச்சர் கோப்பை போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளை நடத்தி தமிழ்நாட்டினை இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக உருவாக்கி வருகின்றார்.

தமிழ்நாட்டிற்கு உலக விளையாட்டரங்கில் மேலும் முக்கியத்துவம் கிடைத்திடும் வகையில் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் ‘WTT ஸ்டார் கன்டென்டர் 2025’ என்ற டேபிள் டென்னிஸ் போட்டியின் வெற்றிக் கோப்பையை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிமுகப்படுத்தி, பயிற்சி ஆட்டத்தைப் பார்வையிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

வேர்ல்டு டேபிள் டென்னிஸ் ஸ்டார் கன்டென்டர் என்ற டேபிள் டென்னிஸ் போட்டியை இன்றைக்கு தொடங்கி வைத்துள்ளோம். இந்த போட்டி இன்றைக்கு தொடங்கி அடுத்த ஒரு வாரத்திற்கு வருகின்ற 30 ஆம் தேதி வரை நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெற உள்ளது.

இந்தப் போட்டியை நடத்துவதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு மூன்று கோடியே 20 லட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கி உள்ளது. இந்த போட்டியில் 25 நாடுகளைச் சேர்ந்த உலகின் 158 முன்னணி டேபிள் டென்னிஸ் வீரர்கள் கலந்து கொள்ள உள்ளார்கள்.

குறிப்பாக இந்தியாவைச் சேர்ந்த 82 வீரர்கள், நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த சரத் கமல் அவர்கள், அதேபோல் இந்தியாவின் புகழ்பெற்ற டேபிள் டென்னிஸ் வீராங்கனை தியா சிட்டாலே (DIYA CHITALE) அவர்களும் இந்த போட்டியில் பங்கேற்கின்றார்கள்.

தமிழ்நாட்டில் இருந்து மட்டும் 18 வீரர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்கின்றார்கள். இந்த போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு அரசு செய்துள்ளது.

இந்த போட்டியில் வெல்வதற்கு போட்டியில் பங்கேற்றுள்ள அனைத்து வீரர்களுக்கும் நம்முடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஸ்டுபா விளையாட்டு பகுப்பாய்வு நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் தீபக் மாலிக், அல்டிமேட் டேபிள் டென்னிஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் இகான்ஷ் குப்தா, பத்மஸ்ரீ மற்றும் ‘கேல்’ ரத்னா விருது பெற்ற இந்திய டேபிள் டென்னிஸ் நட்சத்திர வீரரான சரத் கமல் ஆகியோர் உள்பட சர்வதேச டேபிள் டென்னிஸ் வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

### எம்.எஸ். கணேஷ்குமார் ஒருங்கிணைப்பில்! கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில்

## ஒன்றிய அரசைக் கண்டித்து நெய்வேலி பண்ருட்டியில் கண்டன பொதுக்கூட்டம்!

### அமைச்சர் சி.வி. கணேசன் - அப்துல் மாலிக் சிறப்புரை!

கடலூர் மார்.26.

கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் ஆளும் பா.ஜ.க அரசைக் கண்டித்து கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது.

ஒன்றிய அரசு மும்மொழிக் கொள்கையின் மூலம் இந்தி திணிப்பு, ஒன்றிய பட்ஜெட்டில் “தமிழ்நாடு” என்ற பெயர் முற்றிலும் புறக்கணிப்பு, நிதிபகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பு என தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஆளும் பா.ஜ.க அரசைக் கண்டித்து கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் ஒருங்கிணைப்பில் நெய்வேலி மற்றும் பண்ருட்டியில் கண்டன பொதுக்கூட்டம் 23.03.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 6 மணி அளவில் நடைபெற்றது.

நெய்வேலியில் நடைபெற்ற கூட்டத்திற்கு நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் தலைமை வகித்தார்.

பண்ருட்டியில் நடைபெற்ற கூட்டத்திற்கு நகர கழக செயலாளர் நகர மன்ற தலைவர் க. இராஜேந்திரன் தலைமை வகித்தார்.

இந்த இரண்டு இடங்களிலும் நடைபெற்ற கண்டன பொதுக் கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், கழக இளைஞர் அணி துணை செயலாளர் மண்டலம்2 பொறுப்பாளர் அப்துல் மாலிக், கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் ஆகியோர் கண்டன உரை ஆற்றினார்கள்.

பண்ருட்டியில் நடைபெற்ற கண்டன பொதுக் கூட்டத்தில் மாநில சமூக வலைதள மகளிர் அணி பொறுப்பாளர் தலைமை கழக பேச்சாளர் டாக்டர். பி.எம்.யாழினி கழக இளம் பேச்சாளர் பி.சி. கே. முல்லைவேந்தன்,

நெய்வேலியில் நடைபெற்ற கண்டன பொதுக் கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் மில்டன், கழக இளம் பேச்சாளர் மரியம் பீவி, விளக்கவுரை ஆற்றினார்கள்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ராஜேஷ், செல்வ. துரைராஜ், ஆ. சதாம் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள்.

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பி.பாக்யராஜ், பண்ருட்டி நகர இளைஞரணி அமைப்பாளர் ஏ.சம்பத் ஆகியோர் நன்றியுரையாற்றினார்கள்.

இக்கண்டன பொதுக் கூட்டத்தில் மாநில ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பெரும் திரளாகக் கலந்து கொண்டனர்.

### செஞ்சியில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழா:

## பிறக்கும் குழந்தைகளுக்கு தமிழில் பெயர் சூட்ட வேண்டும்!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.வேண்டுகோள்!



செஞ்சி, மார்ச் 27-

விழுப்புரம் மாவட்டம் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட பணிகள்சார்பில் செஞ்சி மற்றும் மேல்மலையனூர் வட்டாரங்களைச் சேர்ந்த கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா செஞ்சியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணிநெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார். செஞ்சி வட்டார குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் டயானா அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.கலந்து கொண்டு செஞ்சி, மேல்மலையனூர் ஒன்றியங்களைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட கர்ப்பிணிகளுக்கு சீர் வரிசை பொருட்களை வழங்கி வளைகாப்பு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற நான்கு ஆண்டுகளில் ஏழை எளிய மக்கள்பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையும் வகையில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் குறிப்பாக பெண்கள் நலன் சார்ந்த பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

மகளிர் விடியல் பயணம், மகளிர் சுய உதவி குழுவினருக்கு கடன் உதவிகள், மகளிர் உரிமைத் தொகை, உயர்கல்விபடிக்கும் கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தில் மாதம் ஆயிரம் ரூபாய் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு தமிழில் பெயர் சூட்ட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் ஆரணி எம்.பி. எம்.எஸ். தரணி வேந்தன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, செல்வி ராம சரவணன், செஞ்சிவட்டார மருத்துவ அலுவலர்கள் டாக்டர் யோக பிரியா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வட்டார வளர்ச்சி மேற்பரையாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் மேல்மலையனூர் வட்டார குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் கவிதா கவிதா அனைவருக்கும் நன்றி கூறினார்.

### அமராவதியில்

## இந்தியாவின் மிகப்பெரிய கிரிக்கெட் ஸ்டேடியம்!

திருமலை, மார்ச் 27-

ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு உலகிலேயே தலைசிறந்த நகரங்களில் ஒன்றாக அமராவதி தலைநகரை உருவாக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். அதிநவீன தொழில்நுட்பத்துடன் சகல வசதிகளுடன் கூடிய தலைநகரை திட்டமிட்டு அதற்கு ஏற்ப உருவாக்க வேண்டும் என பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக இந்தியாவிலேயே மிகப்பெரிய கிரிக்கெட் ஸ்டேடியம் அமராவதியில் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டது.

1.32 லட்சம் இருக்கைகள் கொண்ட இந்தியாவின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானத்தை கட்டுவதற்கு ஐ.சி.சி(இன்டர்நேஷனல் கிரிக்கெட் கவுன்சில்) ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி அமராவதியில் 200 ஏக்கரில் அமைய உள்ள விளையாட்டு நகரத்தின் ஒரு பகுதியாக இந்த கிரிக்கெட் ஸ்டேடியம் கட்டப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மாநகர கழக செயலாளர் ப.கார்த்திகேயன், எம்.எல்.ஏ., ஏற்பாட்டில்

### முதல்வர் - கழகத் தலைவர் 72வது பிறந்த நாள் விழா!

## வேலூரில் 6072 இஸ்லாமிய பெருமக்களுக்கு ரூ.35 இலட்சத்தில் நலத் திட்ட உதவிகள்!

### மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., தி.அ.முகமது சகி, டி.எம்.கதிர்ஆனந்த், எம்.பி., மேயர் சுஜாதா ஆனந்தகுமார் பங்கேற்பு!

வேலூர், மார்ச் 27-

தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் அவர்களின் 72வது பிறந்த நாளையொட்டி ரமலான் பெருநாளை முன்னிட்டு 6072 இஸ்லாமிய பெருமக்களுக்கு ரூ.35.00 இலட்சம் மதிப்பில் நல திட்ட உதவிகள் வருகிற 29.03.2025 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் வெளியே மாநகர கழக செயலாளர் ப.கார்த்தி கேயன், எம்.எல்.ஏ., தலைமையில் அவருடைய ஏற்பாட்டில் பிரியாணிக்கு தேவையான மளிகை பொருட்களும் இறைச்சிக்கு ரூ.200ம் வழங்கப்பட உள்ளது.

இதனை மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி, கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணித்தலைவர் டி.எம்.கதிர்ஆனந்த், எம்.பி., வேலூர் மேயர் சுஜாதா ஆனந்தகுமார் ஆகியோர்கள் கலந்து கொண்டு வழங்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சிக்கு மாநகர கழக நிர்வாகிகள் சூரி (எ) ஆ.கோவிந்தன், ஏ.ஆர்.முன்னாஷரிப், ஒய்.தேவநேசன், தங்கமணி ஆனந்தன் நா. அசோகன், பகுதி கழக செயலாளர்கள் ஜீ.வன்னிய ராஜா, துணை மேயர் எம். சுனில்குமார், என்.பரமசிவம், ஆர்.பி.இ.சதிஷ்குமார், எம்.ஏ.கணேஷ் ஷங்கர், எஸ்.தயால்ராஜ், வி.ஜி.கே. சுந்திரவிஜி, ஆர்.சத்தியமூர்த்தி, ஜீ.பாலமுரளி கிருஷ்ணா, சி.எம்.தங்கதுரை, ஆர்.கே.ஐயப்பன், தி.அ. முனைவர்பாஷா, பி.முருக பெருமாள் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.பி.ஏழுமலை மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், பொது குழு உறுப்பினர்கள் எஸ். கதிரேசன், சி.சந்திரசேகர், மா.பா.அன்புநிதி, எஸ்.தயாளமூர்த்தி, மாநில அணிகளின் நிர்வாகிகள் சிறுபான்மை பிரிவு எம். நூருல்லா, கொள்கை பரப்பு துணை செயலாளர்கள் டாக்டர்.வி.எஸ்.விஜய், ஜி.ரமேஷ், சேர்காடு கென்னடி மருத்துவர் அணி டாக்டர்.ராஜேஸ்வரி, மண்டல குழுத்தலைவர்கள், புஷ்பலதா, வினஸ் ஆர்.நரேந்திரன், கே.யூசுப்கான், க.வெங்கடேசன், மாவட்ட பிரதிநிதிகள் டேனியல் பாபு, வி.எஸ்.எம்.ஸ்ரீதர், கழிஞ்சூர் கண்ணன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், பி.எம்.தேவராஜ், கே.ஆர். அசோக், டி.லோகநாதன், மாவட்ட இளைஞர் அணி, துணை அமைப்பாளர் வி. எம்.டி.எ.பாலாஜி, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் யு.ரவிக்குமார்,

மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், என். எஸ்.ரவி, டி.சக்ரவர்த்தி, எஸ்.சீனிவாசகாந்தி, எம். அந்தோனி, ஆர்.அருண், எ.உமாசந்திரன், காலப்பா (எ) அப்துல்மஜித், ஜே. ரமேஷ், ஜி.பி.கமல்ராஜ், வட்ட கழக செயலாளர்கள் வி.எஸ்.முருகன், ஜெ.முனுசாமி, சுதாகர், கர்ணா, தேவமணி, வேலுமணி, குணசேகர், பெருமாள், குமார், சண்முகம், கே.ஆனந்தகுமார், பு.மயில்வாகனன், எல்.கே.சேதுராமன், கே.எ.பாலாஜி, ஆர்.லோகநாதன், வி.பி.முரளி கிருஷ்ணன், நீதி.(எ) அருணாச்சலம், கதிரவன், ஜெ.நசீர், ஜே.அயுப்கான், செல்வமணி, எஸ்.ராஜா, டி.பாஸ்கர், குட்டி(எ).ஆறுமுகம், ஜெயப்பிரகாஷ் அப்பு(எ). எஸ்.தனசேகர், வி.ஜெய்சங்கர், டி.மோகன், ஜே.மகேந்திரன், பி.பாபு வழக்கறிஞர், என்.ராஜா, மாமன்ற உறுப்பினர்கள் கா,சு.சண்முகம், ஜே.விஜயகுமார், காஞ்சனா, மாலதி, சுதாகர், சேகர், ஜெய்சங்கர், மம்தா குமார், தர்வம்பாள், சாஜிதா, கங்கா, திருப்பாவை, தபசும் பர்வின், ரேகா, கைருன்னிசா, அபிதாகானம், தவமணி, அஸ்மிதா, மாலதி, கோகிலா, சங்கீதா,

மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், கோ.ச.சரவணன், சி.எஸ். அருணகிரி, வி.கே.கருணாநிதி, பா.சேட்டு, சரோஜா வெங்கடேசன், மகேஸ்வரி, கருணாகரன், பகுதி கழக நிர்வாகிகள், எ.கிருஷ்ணமூர்த்தி, சந்தானம், எஸ். விஜயகுமார், மாநகர அணிகளின் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, ஜீ.முரளிபாஸ்கர், இப்ராகிம், தினேஷ், சதீஷ் குமார், மாணவர் அணி சுகுமார், அப்பு(எ) முத்து குமரன், பிரதிப் கலிமுல்லா, விளையாட்டு அணி, ஏ.கே.கோபிநாத், பி.விஜய்,

ஆர்.கருணாநிதி, டி. மணி கன்டன், வி.டி.கோபிநாத், தொண்டர்அணி, விக்னேஷ்வரன், சண்முகம், குமார், பாலாஜி, அலி, அயலக அணி, துபாய் சீனு, உமாபதி, தொழிலாளர் அணி, வீராசாமி, மணிகண்டன், மகளிர் அணி, ஆமினா, பிரேமா, செல்வத் அரசி, பழனி அம்மாள், அன்புகரசி, ஜீனத், சிறுபான்மை படேல்நவுஷாத், அஸ்லாம், ஆதிபாஷா, அப்துல்கரிம், இஷாத் அஹமத், ரகுமான், யாசிம், இக்பால், நாசர் பாஷா, ஆதிதிராவிடர் அணி, பிரகாஷ், ஆசை தம்பி, தாமஸ், கலைஇலக்கியம் மணிகன்டன், இலக்கிய அணி ஜெயசீலன், துரைஅரசன், வர்த்தக அணி முத்து கணேஷ், மகேஷ், கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் என பலர் கலந்து கொள்ள உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, மேல் மலையனூர் வட்டாரங்களைச் சேர்ந்த கர்ப்பிணி தாய்மார்களுக்குசெஞ்சியில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் முன்னாள் அமைச்சர்செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ ,ஆரணி எம்.பி. எம்.எஸ்.தரணிவேந்தன் ஆகியோர் வளைகாப்பு சீர்வரிசை பொருட்களை வழங்கி வாழ்த்தினர். உடன் ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், மேல்மலையனூர் கண்மணி நெடுஞ்செழியன் உள்ளனர்.